# இந்தியத் துணைத் தூதரகம்
## யாழ்ப்பாணம்

**ஊடக அறிக்கை**

## இந்தியா@75

இந்தியா சுதந்திரமடைந்து 75வது ஆண்டு நிறைவு விழாவானது ஆகஸ்ட் 15, 2022 அன்று கொண்டாடப்படவுள்ளது. இதனை முன்னிட்டு அதற்கு 75 வாரங்களுக்கு முன்னர் இருந்தே உலகளாவிய ரீதியில் இந்தியா @75 என்ற பெயரில் சிறப்பாக கொண்டாடத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தியா சுதந்திரமடைந்த 75 ஆண்டுகால வரலாற்றில் அடையப்பட்ட புகழ்பெற்ற சாதனைகளின் வரலாற்றையும், முற்போக்கான இந்தியாவையும், இந்திய மக்கள் மற்றும் அவர்களின் கலாச்சாரம் என்பவற்றை நினைவு கூர்ந்து கொண்டாடுவதற்குமான இந்திய அரசின் ஒரு முயற்சியான இந்தியா@75 நிகழ்வானது உலகளாவிய ரீதியில் மார்ச் 12 ஆம் தேதி அன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த கொண்டாட்ட நிகழ்வுகளின் ஒருபகுதியாக இந்திய துணைத் தூதரகமானது, உலக சுகாதார தினத்தன்று, அதாவது ஏப்ரல் 07, 2021 அன்று, தூதரக வளாகத்தில் இரத்த தான முகாமுக்கு ஏற்பாடு செய்திருந்தது, 13 அதிகாரிகள் தாமாக முன்வந்து இரத்த தானம் அளித்தனர். இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ் போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.பவானந்தராஜா பங்கேற்று சிறப்பித்தார். இந் நிகழ்வில் உரையாற்றிய அவர்,

யாழ்ப்பாண வரலாற்றிலேயே வெளிநாட்டவர்களால் முதன் முறையாக இரத்ததானம் வழங்கப்பட்டுள்ளது எனவும், ஏற்கனவே ”தொப்புள்கொடி” உறவுகளாக இருக்கும் எமது உறவானது இந்த இரத்ததானத்தின் மூலம் மேலும் பலப்படும் எனவும் குறிப்பிட்டார்.

நிகழ்வுகளின் புகைப்படங்கள் சில இணைக்கப்பட்டுள்ளன.

****

07 ஏப்ரல் 2021
யாழ்ப்பாணம்